# மெட்ரோ ரயில் நிலையத்தில் பயணியருக்கு நவீன பூங்கா

**சென்னை, செப். 24–**

ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில், நவீன பூங்கா அமைக்கப் படுகிறது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும் மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

இதில், கோயம்பேடு – சென்ட்ரல் மெட்ரோ ரயில் பாதையில், ஷெனாய் நகர் மெட்ரோ சுரங்க ரயில் நிலையம் உள்ளது. இந் நிலையத்தின் மேற்பகுதி தரை பகுதியில், நிறைய காலி இடம் உள்ளது.

இந்த இடத்தை, பயணியர் பயன்படும் வகையில், நவீன பூங்கா அமைக்கப் படுகிறது.

நடைபயிற்சி பாதை, '8' வடிவ நடைபாதை, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மைதானம், வண்ண பூச்செடிகள் என, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஏற்ற வகையில், இப்பூங்கா வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஆறு மாதங்களில் கட்டுமான பணி முடித்து, பயன்பாட்டிற்கு திறக்கப்படும்.









மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில் அமைய உள்ள, நவீன பூங்கா வரைபடம்.